அணிந்துரை

செந்தமிழ்க் கலாநிதி நூற்கடல் பண்டித வித்துவான் தி.வே. கோபாலையர்

திருவாளர் வெ. இராசகோபாலன் தம் பணிக்காலம் முழுதும் ஜிப்மர் மருத்துவக்கல்லூரியில் பிரஞ்சுமொழிப் பேராசிரியராகப் பணியாற்றிப் பணி ஒய்வு பெற்றவர். இப்பேராசிரியர் 2000இல் பிரஞ்சுமொழியின் 17ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றினையும், 2003இல் 18ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றினையும் இனிய சுவையான தமிழில் கல்விவல்லார் பலரும் நயந்து பாராட்டும் வகையில் வரைந்துதவிய பெருமைக்கு உரியவர். பிரஞ்சு இலக்கியத்தில் பல்லாண்டு தோய்ந்த அனுபவத்தால் முயற்சியின்றி நகைச்சுவை தோன்றத் தம் விமர்சனத்தைத் தெளிவாக ஆழ்ந்த கருத்துடன் தமிழில் வரையும் ஆற்றல் இவருக்கு இயல்பாகவே அமைந்துள்ள திறத்தைப் புதுச்சேரி பைரவி கர்நாடக சங்கீத சபையின் 2005ஆம் ஆண்டுவிழா மலரில், ‘சபாக்களும் விருதுகளும்’ என்ற தலைப்பில் தம் பெயரிலும், வேறு பல தலைப்புகளில் பிறர் பெயரிலும் இவர் வரைந்துள்ள பல கட்டுரைகளில் கண்டு மகிழலாம்.

இப்பெருமகனார் இவ்வாண்டு பிரஞ்சு இலக்கியத்தின் 19ஆம் நூற்றாண்டு வரலாற்றை வரைந்துள்ளார். 19ஆம் நூற்றாண்டின் பிரான்சுநாட்டு வரலாறே சிக்கலானது. இருமுறை சர்வாதிகார ஆட்சி—இருமுறை மன்னர் ஆட்சி, இருமுறை புரட்சிகள்—இருமுறை மக்கள் ஆட்சி — என எட்டுவித மாற்றங்களை அரசியலில் கண்டது அந்த நூற்றாண்டு. நெப்போலியன் அன்று செய்த நிர்வாகச் சீர்திருத்தங்கள் பலவும் இன்றும் நிலைத்து நிற்கின்றன. 1871இல் மூன்றாம் முறை அமைந்த குடியரசில் தொடக்கக் கல்வி இலவசமும் கட்டாயமுமாக்கப்பட்டுக் கல்விச்சாலைகள் மத நிறுவனங்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டன.

விஞ்ஞான முன்னேற்றத்தால் பல தொழிற்சாலைகள் தொடங்கப் பட, விவசாயத்தொடு தொழில்களும் பொதுமக்கள் பொருளாதாரத்தை முன்னேற்றின. தொழிலாளர் தொழில்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்துச் செல்வர்களும் தம் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

மொழியளவில் செவ்வியல் இலக்கியத்தின் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்துப் புனைவியல் இலக்கியம், கவிதை—நாடகம்—உரைநடை— என்ற மூன்று நிலைகளிலும் உயர்நிலை அடைந்தது. பூத்த செந்தாமரைக் காடாக இலக்கியக் கருவூலங்களை வழங்க ஐம்பதின்மருக்கு மேற்பட்ட சிறந்த இலக்கியவாதிகள் தோன்றினர். அவர்களிடையே ஏறத்தாழ முப்பத்தைம்மரின் வாழ்க்கைக் குறிப்பு — இலக்கியப் பணி — ஒரோவழி அவர்கள் யாத்த கவிதைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகள் — என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் குறிப்பிடும் செய்திகளைச் சற்றே சுருங்கக் காண்போம்.

செல்வக்குடியில் பிறந்து நுண்ணறிவில் சிறந்து தம்மைவிட அறிவிலும் சுவை நுகர்விலும் தரக்குறைவானவர்களைக் கணவராக அடைந்து விருப்பம் நிறைவேறாமல் வெறுப்பில் வாழ்வினைக் கடத்திய ஜெர்மேன் த ஸ்தால் என்ற பெருமாட்டியார் தம் சுய சரிதையை இடைமிடைந்து பெண்களுக்காகவே தெல்ஃபின், கொரின் என்னும் நாவல்கள் இயற்றி அவற்றால் பிரஞ்சு புனைவியல் இலக்கியத்துக்கு வழிகோலிய முன்னோடியாகவும், பெண்ணியக்கருத்துகளைக் கொண்டு சமுதாயத்தைச் சாடிய துணிச்சல் மிக்கவராகவும் திகழ்ந்தார்.

இனம் விளங்காத சோகஉணர்வுகளில் தவித்தல்—தனிமையை நாடுதல்—என்பனவற்றைப் பிறவிக்குணங்களாகப் பெற்ற ஷத்தோப்ரியா செல்வக்குடியில் பிறந்தவர். உயர்பதவிகள் வகித்து 80வயது வரை செவ்வத்துடன் வாழ்ந்து கழிந்த இவர் வரைந்த பல காதற் கதைகளைவிடக் ‘கல்லறைக்கு அப்பால் இருந்து நினைவுகள்’ என்ற பெயரில் 38 ஆண்டு முயன்று இவர் இயற்றிய நூல் பிரஞ்சு இலக்கியத்தின் தலைசிறந்த நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. சோகத்தில் நிம்மதியிழந்து தனிமையை நாடும் கதாநாயகனைப் பற்றிய இவர் படைப்பு, பின்வரும் புனைவியல் எழுத்தாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. கவிதை கொஞ்சும் உரைநடை வரைந்து பெருமை பெற்றவர் இவர்.

தம் காதல் பிரிவின் சோகத்தைக் கவிதையாக்கிப் புகழ் படைத்துச் சாதாரண சாமியாரைப் பற்றி 10000 அடிகளைக் கொண்ட காப்பியத்தையும், ‘ஒரு தேவதையின் வீழ்ச்சி’ என்று தலைப்பிடப்பட்ட 11000 அடிகளைக் கொண்ட காப்பியத்தையும் வரைந்து அதன்கண் மனித ஆன்மா தெய்வத்தை நோக்கி எழுவதனை விவரித்துத் ‘திராட்சைக்கொடியும் வீடும்’ என்ற கவிதைத் தொகுப்பில் தமக்கும் தம் ஆன்மாவுக்கும் இடையே நிகழும் உரையாடல்களை வருணித்த லமார்த்தீன் தாம் ஈட்டிய செல்வங்களை எல்லாம் செலவழித்துத் தம் இறுதிக் காலத்தில் வறுமையில் வாடி நலிந்தோருக்கு அரசாங்கம் வழங்கிய உதவித் தொகையில் வாழ்ந்த பரிதாபத்துக்குரியவராவர்.

செல்வக்குடியில் பரம்பரைச்சொத்துக்கள் பறிக்கப்பட்டுத் தம் பெற்றோரின் மூப்புக்கால மகனாகப் பிறந்த விஞ்ஞி, கோடீசுவரருடைய மகள் பன்பரி என்பவளை மணந்து, மாமனார் அலட்சியம் – மனைவியின் இலக்கியச்சுவையற்ற தன்மை - என்ற தொல்லைகளுக்கு இடையிலும் ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நாடகத்தை பிரஞ்சில் பெயர்த்தும், தாமும் பிரஞ்சு மொழியில் இரு நாடகங்கள் இயற்றிப் புகழ் பெற்றும், நாடக நடிகையிடம் கொண்ட காதல்வாழ்வு தோல்வியுறத் தம் 54ஆம் ஆண்டில் தமக்கு ஏற்பட்ட குடல்புண்ணால் 10 ஆண்டுகள் வருந்திய நிலையிலும் கண்பார்வை இழந்த தம் மனைவி பன்பரிக்கு பணிவிடையாற்றி அவள் இறந்த அடுத்த ஆண்டே தம் தோல்விமயமான வாழ்க்கையை முடித்துக்கொண்டார். மனித வாழ்வின் துன்பங்களை விரும்பி ஏற்று, தனிமையையும் கவிதையையும் சுவைத்து மௌனத்தையே பெரிதாகக் கருதி மேற்கொண்ட விஞ்ஞி, கடவுளால் கைவிடப்பட்டு விதியினால் நசுக்கப்படும் மனிதனுடைய வாழ்வில் துன்பம் மரணம் என்ற இரு நிலைகளே சத்தியம் என்று கருதியவர். இவர் தத்துவவிளக்கக் குறியீட்டைப் பயன்படுத்திக் கவிதை, நாடகம், புதினம் என்ற முத்திறங்களிலும் தம் முத்திரையைப் பதித்துள்ளார். ‘ஓர் ஓநாயின் இறப்பு’ என்ற இவர் கவிதை உலகமுள்ளவரை இறவாப் புகழ் பெற்று விளங்கும்.

19ஆம் நூற்றாண்டின் கவிதைச்சக்கரவர்த்தியாய்த் திகழ்ந்த விக்தோர் உய்கோ கவிதை, காப்பியம், நாடகம், நாவல், அரசியல் கொள்கை விமரிசனம், சமுதாயச் சீர்த்திருத்தச் சிந்தனை, வரலாறு, ஆன்மிகத் தத்துவச்சிந்தனை என்ற அனைத்துத் துறைகளிலும் அழியாச் சுவடு பதித்தவராக, தம் சொந்த பிரான்ஸ் நாட்டுக்கு 20 ஆண்டுகள் வாராமல் வெளிநாடுகளில் வாழ்ந்து, மூப்புக்காலத்தில் மனைவி மக்கள் எல்லோரையும் இழந்து, பெயரன் பெயர்த்தி அரவணைப்பில் வாழ்ந்து 83ஆம் ஆண்டில் தாம் இறந்தபோது பல லட்சம் மக்கள் தம் சவ ஊர்வலத்துக்குப் பின்தொடர்ந்து வந்த பெருமைக்– குரியவர். இவர் 45000 அடிகளில் வரைந்த ‘காலத்தின் காவியம்‘ கூறாத அறச்செய்திகளே இல்லை எனலாம். இவருடைய நாவல் ஒன்றினை ‘ஏழை படும் பாடு’ என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்த சுத்தானந்த பாரதி ‘பாரத சக்தி மகாகாவியம்’ வரைய எழுச்சி தந்தது இவருடைய ‘காலத்தின் காவியமே’.

தம் பதினான்காம் வயதிலேயே கவிதை புனைந்த பிறவி மேதையாகிய முய்சே பழைய இலக்கியத்தையும் கைவிடாது புதுமை இலக்கியத்திலும் ஈடுபட்டவராய், காதலில் தாம் கண்ட தோல்வியை ‘இரவு’ என்ற தலைப்பில் நான்கு நீண்ட கவிதைகளில் சோக வருணனையாகக் கொட்டித் தீர்த்து, 15க்கு மேற்பட்ட நாடகங்களை வரைந்து தம் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்ட காலத்திலேயே வரைந்த அவற்றில் தம் தனிமை – நிறைவேறாக் காதல் – இழந்துவிட்ட பண்புத்தூய்மை – இவற்றிற்கே முக்கியமான இடம் அமைத்து, குடிப் பழக்கமும் பல பெண்டிர் உறவும் கொண்டு, வாழ்க்கையில் கசப்பும் தூய்மையை இழந்த குற்ற உணர்வுமே தலைதூக்க உயிர்நீத்தார். ”கவிதை வெறும்பொழுதுபோக்கன்று ; உயிர்த்துடிப்புடைய உள்ளங்களின் பரிமாற்றம்” என்ற கொள்கையராய்த் தெய்வநம்பிக்கை உடையவராய், ‘ஒரு தலைமுறையினரை நாத்திகச் சிந்தனையூட்டிக் கெடுத்தவர் வொல்தேர்’ என்ற உறுதியான எண்ணமுடையவர் இவர்.

உயர்குடியைச் சார்ந்த ஜோர்ழ்சாந்த அம்மையார் தம் 18ஆம் வயதில் திருமணம் செய்துகொண்டு 8 ஆண்டுகள் இல்லறம் நடத்தி ஓர் ஆண் ஒரு பெண் குழந்தைகளுக்குத் தாயாகிப் பின் கணவனை விட்டுப் பிரிந்தவர். சுடர் மிகு அறிவும் உணர்ச்சி மிகும் உள்ளமும் கொண்ட மகளிர் சாதாரண சுவையற்ற ஆண்களை மணப்பதால் அனுபவிக்கும் துன்பங்களை விவரிக்கும் பெண்ணியக் கருத்துகளைக் கொண்ட புதினங்கள் பல இயற்றிய இவர் தம்முடைய வாழ்க்கைச் சரிதத்தை 20

தொகுதிகளாக வெளியிட்டவர். யதார்த்த இலக்கியம் நன்மையை விடத் தீமையே பயக்கின்றது என்பது இவர் கருத்து. பெண் மனத்தின் உணர்ச்சிப் போராட்டங்களை எடுத்தியம்பிப் புகழ்பெற்ற இவருடைய கிராமியச் சூழ்நிலைக் கதைகளையே மக்கள் விரும்பிப் படிக்கின்றனர்.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த பல்சாக் மனித சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கி அவர்கள் போடும் வேஷங்களையும் செய்யும் பித்தலாட்டங்களையும் உள்ளது உள்ளபடியே கூறி வெளிவேடதாரியை வெளிப்படுத்திக் காட்டியவராய், வரலாற்றாசிரியர்—விஞ்ஞானி—சமுதாய ஆராய்ச்சியார்—ஓவியர்—நாடகாசிரியர்— என்ற பல திறச் சிறப்புகளுக்கும் உரியவராய், தம் 30ஆம் வயதில் எழுதிய லே ஷூ ஆ என்ற புதினம் வெற்றி கண்டதும் ஒரு நாளைக்கு 15 மணி வீதம் தொடர்ந்து 20 ஆண்டுகளில் 91 புதினங்களும் 30க்கு மேற்பட்ட குறுநாவல்களும் 5 நாடகங்களும் எழுதி எழுத்துலகம் மறக்க முடியாத 200க்கும் மிகுதியான பாத்திரங்களையும் படைத்தார். தம் 33ஆம் ஆண்டில் தம் ரசிகையான ஹம்ஸ்கா என்ற சீமாட்டியைக் காதலித்து அவள்கணவர் இறக்கும் வரை 9 ஆண்டுகள் காத்திருந்து அடுத்த 9 ஆண்டுகளில் தம் கடன்களைத் தீர்த்து வளமான வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் சேர்த்துத் தம் 50 ஆம் வயதில் அவ்வம்மையாரை மணந்து சில மாதங்களில் உயிர் நீத்த துர்பாக்கியசாலி இப்பெருமகனார்.

அலெக்ஸாந்த்ர் துய்மா பிரான்சு நாட்டு வரலாற்றில் நாடகத்துக்கு ஏற்ற கருப்பொருள்கள் பல உள்ளன என்பதனை எடுத்துக்காட்டி வரைந்த பல நாடகங்களுள் அந்தோணி, கீன், லா தூர் தநேல் ஆகியவை பலநூறு நாள்கள் மேடை ஏறின. துய்மா படைத்த 80 நாடகங்களில் பல ஏனைய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய வரலாற்று நாவல்களில் கற்பனையால் பின்னிய தோரணங்களை மாட்டும் ஆணியாகவே வரலாறு பயன்படும். இனிய இயல்புடைய துய்மா 'எதற்கும் கவலைப்படாத மனத்திண்மையுடைய சீர்மிகு சீமான்' என்று உய்கோவால் பாராட்டப்பட்டவர். 1870இல் இவர்உடல் இவர் பிறந்த கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்ட சவப்பெட்டி 2002இல் தோண்டி எடுக்கப்பட்டு பாரீசில் பாந்தியோன் என்னும் இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு விக்தோர் உய்கோ சமாதியருகில் மீண்டும் புதைக்கப்பட்டது. துய்மாவின் கதைகள் நூற்றுக்கும் அதிகமான மொழிகளில் பெயர்க்கப்பட்டு 200க்கும் அதிகமான சினிமாப் படங்களாக வெளி வந்துள்ளன.

சிறுவயதிலேயே தாயை இழந்து, தந்தை அத்தை ஆசிரியர் என்பவர்களிடம் வெறுப்பு-கிறித்துவமதம் மன்னர் ஆட்சிமுறை என்பவையிடையும் வெறுப்பு-என வெறுப்புகளிடையே வளர்ந்து கணிதத்தில் வல்லவராய், நெப்போலியன் ஆட்சியில் பல உயர்ந்த பதவிகள் வகித்து, புதினங்கள் எழுதுவதில் ஈடுபட்டு "நீண்ட காட்சி வருணனைகள் கூடா; எதனையும் சுற்றி வளைக்காமல் உள்ளபடியே கூறவேண்டும்; புதினங்களின் நடை சட்டப்புத்தகங்களின் நடைபோல, வெற்றெனத் தொடுக்காமல் மற்றொன்று விரிக்காமல் அமைய வேண்டும்; அக உலகின் அசைவுகளையும் கற்பனைகளையும் உட்கொள்ள வேண்டும்'' என்ற புதினங்கள் பற்றிய தம் கருத்துகளை விளக்கி, சிவப்பும் கறுப்பும் — பார்ம்நகரத்துத் துறவிகள் ஆசிரமம் — என்ற புதினங்களை இயற்றிய எழுத்தாளர் ஸ்தாந்தால் சிறந்த எழுத்தாளராகப் போற்றப்படுகிறார்.

குறுநாவல்களில் நம்பகத் தன்மையைவிடக் கற்பனைக்கே அதிக இடமுண்டு. படிப்பவரின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களை வியப்பில் ஆழ்த்தி விறுவிறுப்புத் தந்து ஒரே மூச்சில் படித்து முடிக்கச் செய்யும் குறுநாவல்களை மக்கள் பெரிதும் விரும்பியதால், மந்திர சக்தி—மாயா ஜாலம்—பேய்க்கதை—ஆவிகளுடைய மனிதசக்திக்கு அப்பாற்பட்டன—போல்வனவற்றை அடிப்படையாகச் கொண்டு குறுநாவல் பல இயற்றிய ஷார்ல் நொதியே அடுத்த நூற்றாண்டில் வரப்போகும் மீநடப்பியல் எழுத்துப் பாணிக்கு ஒரு முன்னோடியாவார். வசதியான குடும்பத்தில் பிறந்து இடைவிடாது அரசாங்கச் செல்வாக்கை அனுபவித்துப் பெரிய அரசியல் விருதுகளைப் பெற்ற மெரிமே ஒரு துன்பியல் கொள்கையராய் மனிதர்களை நம்பக்கூடாது என்ற உறுதி உடையவராய் யதார்த்தமும் சற்றே அமானுஷ்யமும் விசித்திர நிகழ்வுகளும் கொண்ட வீனஸ் சிலை— கொலொம்பா கர்மேன் – என்ற குறுநாவல்கள் வாயிலாகவே எழுத்தாளர் வரிசையில் உயர்ந்தவர்.

நெர்வால் தாம் காதலித்த நடிகை வேறொருவரை மணந்து விரைவில் இறந்து போய்விடவே தம் மனச்சோர்வை எதிர்த்துப் போராட எழுத்தைக் கருவியாகக் கொண்டு இயற்றிய 8 குறுநாவல்களுக்கும் 10 கவிதைகளுக்குமிடையே ஒரு தொடர்பு இழையோடுவதைக் காணலாம். கனவு காண்பதை இதம் தரும் அனுபவமாகக் கொண்ட இவர் ஓசையின்பம் கொஞ்சும் வசனகவிதைக்கு வித்திட்டவராவர். மன நோயாளியான இவர் தம் 47ஆம் வயதில் பாரீஸ்நகர வீதியில் தூக்கில் தொங்கி உயிர்விட்டமை வருத்தம் தரும் செய்தியாம்.

19ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் பெண்கவிஞராய்ப் படிப்பறிவற்றவராய்க் கவித்துவத்தை இயற்கை தந்த வரமாகப் பெற்ற பிறவிக்கவிஞரான மர்சலின் தாம் பெற்ற நான்கு குழந்தைகளும் இறந்துபோக, இவரை வாட்டிய சோகம் இயற்கையாகக் கவிதை நடையில் வெளிவந்தது. இவருடைய கவிதைகள் உய்கோ முதலிய உயர்ந்தோர் பலராலும் போற்றப்பட்டன.

'கலை கலைக்காகவே' என்ற கொள்கையராய்க் கலை விமரிசகராகவும் பத்திரிகை நிருபராகவும்—பல இலக்கிய விமரிசகராகவும் பல கட்டுரைகளையும் பல குறுநாவல்களையும் எழுதிப் புகழ் பெற்ற கொத்தியே, "கவிதை அழகின் ஆராதனை—படைப்புச் சுதந்திரத்தின் வெளிப்பாடு—நவரத்தினம் இணைந்து தங்கத்தாலாகிய அணிகலனாவது போலத் தொடைநோக்கும் நடைநோக்கும் இயல்நோக்கும் செயல் நோக்கும் தம்மில் பிணைவதுவே கவிதை" என்ற கருத்தினை உடையவர்.

தம் 33ஆம் வயதில் ரோம சாம்ராஜ்ய வரலாற்றை நூலாக வடித்த மிஷலே, "ஒரு வரலாறு, கடந்த காலத்தின் எல்லாத் துறைகளுக்கும் மறுவாழ்வு கொடுத்து மீண்டும் வாழச்செய்வதாக இருக்க வேண்டும்" என்ற கொள்கையராய்த் தம் 50 ஆம் வயதில் பிரான்சு நாட்டு வரலாற்றை 17 தொகுதிகளில் உயிரோட்டமுடைய உரைநடை வன்மையால் ஒருகாவிய இலக்கியமாகவே நமக்குப் படைத்து அளித்தவராவர்.

சமுதாயத்தின் அங்கங்களையும் அவற்றின் வளர்ச்சியையும் பேசும் சமூகவியல் என்னும் துறையை உண்டாக்கியவர் ஒகுய்ஸ்த கோந்த் என்ற சான்றோராவர்.

கவிதை நாவல் சில எழுதிய சேந்த் பேவ் அவற்றால் புகழ் பெறாது, உவமை நயங்களோடு அழகாகவும் விறுவிறுப்பாகவும் காணப்படும் தம் உரைநடையில், கவிஞர்களும் எழுத்தாளர்களும் வரைந்தவற்றின் நிறைகுறைகளை விமர்சிக்கும் திறனாய்வுத்துறையில், புதுமையையும் நயத்தையும் புகுத்திப் புகழ் பெற்றவர்.

இயேசுவின் வாழ்க்கை, அறிவியலின் எதிர்காலம் என்ற நூல்களை இயற்றிய ரனா அறிவியல் — மதம் — கவிதை — என்ற மூன்றிற்கும் இடையே முரண்பாடில்லை என்று கருதினார்.

கவிஞனுடைய காதல் பிரிவு சோகம் என்ற சொந்த இன்ப துன்பங்களை விடுத்துக் 'கலை கலைக்காகவே' என்ற கருத்தில் புதுவகைக் கவிதைகளை யாத்தவர் பர்னாசுக் கவிஞர்கள். இம்மரபைச் சார்ந்த லெக்கோந்த் த லீல் கீழைநாடுகளுக்குப் பயணம் செய்து சிறிதுகாலம் புதுச்சேரியில் தங்கியவர் : இராமாயணம், பாரதம் பாகவதம், ரிக்வேதம் பற்றி மொழிபெயர்ப்பு நூல்களால் அறிந்தவர். பண்டைக்கால மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்பதே இவர் கவிதைகளில் மலர்ந்தது. இவர் பண்டைக்காலம் பற்றி 54 கவிதைகள் இயற்றினார். "கவிதை அழகின் ஆராதனை, யாப்பு விதிகளைத் தளர்த்தக்கூடாது; கவிதை கைதேர்ந்த சிற்பி வடித்த கற்சிலை போல அப்பழுக்கின்றி எழிலுடன் காணப்படவேண்டும்" என்பது இவர் கொள்கை. ஹோமரின் இலியட், ஒடிசி என்ற காவியங்களைப் பிரஞ்சுமொழியில் இவர் பெயர்த்தார். "தற்கால மனிதர்களின் இழிநிலைக்கு விடிவே இல்லை; மரணம் ஒன்றே விடுதலை அளிக்க வல்லது" என்பது இவர் கருத்து. இவர் விலங்குகளின் இயல்புகளை வருணிப்பதில் வல்லவர்.

எரேதியா எழுதிய வெற்றியின் அடையாளச் சின்னங்கள் என்னும் தொகுப்பில் அமைந்த 118 சானட்களும், மறைந்த பண்டைய நாகரிகங்கள் – இயற்கை எழில் – வாழ்வின் மகிழ்ச்சி – வீரத்தின் எழுச்சி– பற்றி அமைந்தவை.

எதுகையும் மோனையும் மிளிர முயற்சியின்றிச் சரளமாகக் கவிதை புனையும் பேராற்றல் பொருந்திய தெயோதோர் த பாவீல் 32 கவிதைகளையும் 12 நாடகங்களையும் வழங்கியதோடு சீரிய யாப்பிலக்கண நூலும் வரைந்துள்ளார்.

ஏழை எளியவர்களின் அன்றாடப் பிரச்சினைகள்—கனவுகள்—ஆசாபாசங்கள்—இவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு ஃகொப்பே ஜனரஞ்சகக் கவிஞராகத் திகழ்ந்தார்.

ஷார்ல் பொதலேர் சிறுவயதிலேயே தீய பழக்கங்களுக்கு ஆளானபோதும், ஓவியம் இசை என்பனவற்றிலும் கவிதை புனைவதிலும் வல்லவர். இவருடைய 'தீயவையில் பூத்த மலர்கள்' என்ற கவிதைத் தொகுப்பும் கலைவிமரிசனக்கட்டுரைகளும் சிறப்பானவை. 43ஆம் வயதில் பாரிசவாயுவினால் ஒரு பக்கம் செயலிழந்த இவர் தம் விதவைத்தாயின் பராமரிப்பிலிருந்து 46ஆம் வயதில் உயிர் நீத்த பரிதாபத்துக்குரியவர். ஆன்மிகமும் சிற்றின்பமும், இரக்கமனமும் கொடூர மனமும், தெய்வம் தொழுதலும் தெய்வப்பழிப்பும், எழுச்சியும் பாதல வீழ்ச்சியும்—இவருடைய இரத்தினச்சுருக்கமான கட்டுக்கோப்புடைய ஒரே கவிதைக்குள்ளேயே காணலாம். ஃபிரஞ்சுக்கவிதை யென்றால் பிற நாட்டவருக்கு முதலில் நினைவுக்கு வருபவர் பொதலேர்தான். குறியீட்டுக்கவிதையில் புதியதொரு பாலத்தை வகுத்துத் தந்த இவர் தாம் வாழ்ந்த காலத்தில் மதிக்கப்படாமை வருந்தத் தக்கது.

"வாழ்க்கைச் சம்பவங்களின் பின்னணியிலிருந்து நம் கவனத்தை ஈர்த்து நிறுத்தக்கூடியவற்றைக் காணச்செய்வதே நடப்பியல் புதின எழுத்தாளர் குறிக்கோள்" என்ற கொள்கைக்கு முன்னோடி குய்ஸ்தாவ் ஃப்ளொபேர். 23 வயதிலேயே நரம்புநோய்த் தாக்கத்தால் கிராமத்திலேயே தங்கி, "வாழ்க்கை சோகமயமான ஏமாற்று வேலை: இதிலிருந்து படைப்புக்கலைஉலகம்தான் காப்பாற்ற முடியும்" என்ற துணிவுடன் மதாம் பொவாரி—சலாம்போ—மூன்று கதைகள்—முதலிய புதினங்களை இயற்றிய இவர், "புனைவியல் இலக்கியம் காதலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து யதார்த்தத்துக்கும் கனவிற்கும் இடையே உள்ள இடைவெளியைக் காட்டத் தவறிவிட்டது" என்றும் கருதினார். தாம் ஒவ்வொரு நூல் எழுதும் முன்னும் பலநூறு நூல்களைப் படித்துச் செய்திகளைத் தெளிவாகச் சேகரித்துத் தூய்மையான வாக்கியங்களாக வரைவதில் இவர் வல்லவர்.

சிறுகதைச்சிற்பியாகிய மோபசா மாமிசப்பிண்டம் என்ற தம் முதல் கதை அளித்த வெற்றி உற்சாகத்தில் பத்தே ஆண்டில் 64 புதினங்களும் 300க்கும் மேற்பட்ட குறுநாவல்களும் எழுதியவர். இவர் மனிதனின் இரட்டை வேடத்தை தோலுரித்துக் காட்டியவர். அமானுஷ்ய நிகழ்வுகளைக் கொண்ட பயங்கரக் கதைகள், பேய்க்கதை, கோரக்கனவுகள், சித்திப் பிரமை உணர்வுகள் போன்றவை இவருடைய கதைகளின் கருக்களாகும். இவர் சிறுகதைகளால் அழியாப் புகழ் பெற்று விளங்குகிறார். இவருடைய சிறுகதைகள் பலமொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

சோலா ஒரு குடும்பத்தின் ஐந்து தலைமுறைகளை ஆராய்ந்து காட்டுவதைத் தம் படைப்பின் கருவாகக் கொண்டு ஆண்டுக்கு ஒன்று வீதம் 20 நாவல்களைத் தொடர்ச்சியாக 31 பாகங்களாக 1200 பாத்திரங்களைக்கொண்டு படைத்துள்ளார். இவர் நூல்களின் கோடிப் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன; பல நாடக மேடை ஏறின. செல்வச்செழிப்பில் வாழ்ந்தவர் சோலா.

தொதே வரைந்துள்ள கதைகளில், ஏழைக்குழந்தைள், அதிர்ஷ்டம் அற்றவர்கள், மாஜி மன்னர்களின் குடும்பத்தினர், அரசியல்வாதிகள், மதத் தீவிரவாதிகள்—முதலாகப் பலதிறப்பட்ட மக்களின் வாழ்க்கைகள் இடம் பெற்றுள்ளன.

ழுயில் வேர்ன் அறிவியல் கதைகளுக்கு முன்னோடியாவார். இவர் 80க்கும் மேற்பட்ட கற்பனைப் பயணங்கள் பற்றிய நூல்களை இயற்றியுள்ளார். இவர்கதைகளில் கூறப்பட்ட செய்திகளான அன்றைய கற்பனைகள் இன்றைய உண்மையாகி வருவதனைக் காண்கிறோம்.

துய்மாவின் மகன் சமுதாயப் பழக்கங்களைக் கிண்டல் செய்யும் நகைச்சுவை நாடகங்கள் பல இயற்றியுள்ளார். சந்தர்ப்பவாதிகளைத் தோலுரித்துக்காட்டும் 'காக்கைகள்' என்ற பிரபல நாடகத்தை எழுதியவர் ஹென்றி பேக் என்பவர். எழேன் லபீஷ் இந்நூற்றாண்டின் மிகப்பிரபல நகைசச்சுவை நாடக ஆசிரியராய், 100க்கும் மேற்பட்ட நாடகங்களை வரைந்து, சோகங்கள் சூழ்ந்து எழுத்துலக வானத்தை இருட்டடித்துக் கொண்டிருந்த காலத்தில், மனம் விட்டுச் சிரித்து மகிழவைக்கும் லபீஷுடைய நாடகங்கள் ஒளி மின்னலாய்ப் பளிச்சிடுகின்றன.

குறியீட்டுக் கவிஞர் வெர்லேன் வாழ்க்கை, துயரமும் ஓரினச் சேர்க்கையும் குடிப்பழக்கமும் கொண்டது. இவர் 1866இல் ஒரு கவிதைத் தொகுப்பும் 1880இல் 'ஞானம்' என்ற ஒரு கவிதைத் தொகுப்பும் வெளியிட்டார். கவிதைக்கு இசைஇன்பமும் ஓசைஇன்பமும்தாம் முக்கியம் என்பதும், கவிதையின் பாடுபொருள் பளிச்சென்று கண்ணுக்குப் புலப்படாமல் மெல்லிய துணி அல்லது இலேசான பனியினால் மூடப்பட்ட காட்சிபோல் மங்கிய ஒளியில் இலேசாகப் புலப்படுமாறு இருக்க வேண்டும் என்பதும் இவர் கருத்து.

மல்லார்மே, "தெய்வம் இல்லை; எல்லாம் சூனியம்; சூனியத்திலும் அழகு உண்டு; கவிதை திரிசொற்களால் கற்றவர்க்கே புலனாம் வகையில் குறியீடாகச் சுட்டப்பட வேண்டும்; கவிதையின் மர்மம் புதிராக இருக்க வேண்டும்; அதன் சாவியை வாசகர் தேடி எடுத்து அதனைத் திறக்க வேண்டும்; அதற்குப் பொறுமையும், பக்குவமும் அதிர்ஷ்டமும் தேவை" என்று கருதினார். இவர் 20ஆம் நூற்றாண்டின் வலேரி போன்ற கவிஞர்களுக்கு முன்னோடி.

சுருங்கக் கூறின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி புனைவியல் கவிதைக் காலம். பின், "கவிதை குறியீடுகளை உட்–கொண்டமைய வேண்டும். இயற்கையையும் உலகத்தையும் குறியீடுகளால் இணைக்க வேண்டும்" என்ற நிலை ஏற்பட்டது. கவிதை தெய்வ நம்பிக்கையை இழந்த வாழ்க்கைச்சுமையின் சோகத்திலிருந்து விடுதலை பெற உதவுவதாயிற்று. கதைகளிலும் நாடகங்களிலும் மனிதனின் வெளிவேஷம் படம்பிடித்துக் காட்டப்பட்டன. ஏவல் – பில்லிசூனியம் – பேய்கள்—என்பனவற்றில் சிலர் நம்பிக்கை கொண்டு அவை பற்றி ஆராயத் தொடங்கினர். கற்பனையில் காணப்பட்ட செய்திகள் அறிவியல் முன்னேற்றத்தால் உண்மை வடிவம் பெற்றன.

20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் எழுந்த கேள்வி அறிவியலா, மதமா, மானுடமா? இவற்றில் இலக்கியம் கலை ஆகியவற்றின் பங்கு என்ன? இவை புதிராகவே உள்ளன.

19ஆம் நூற்றாண்டு, அடுத்த நூற்றாண்டில் பிரஞ்சு இலக்கிய நோபல்பரிசு பெறத் தகுதியான 14 எழுத்தாளர்களை உருவாக்கியது என்பதே அதன் இலக்கியப்பெருமையைச் சாற்றும் எனலாம். எனினும், சிக்கலான 19ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றைச் சுவைபட வரைந்துள்ள திரு. வெ. இராசகோபாலன் 20ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றையும் இதுபோல சுவைபட எழுதும் ஆர்வத்தைத் தொடர்ந்து பெற அவர் 'நோய்தபு நோன்தொடையுடன்' வாழ இறைவனை வேண்டுகிறேன்.

அன்பன்

தி. வே. கோபாலையர்